கூடுதலாக மின் பளு அதிகரித்திருக்கிறது என்று கண்டறியப்பட்டால்— மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைபோல் புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டு, அந்தப் பகுதிகளில் தடையில்லா மின்சாரம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு ஆவன செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***4995—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

2014 ஜூலை 23]

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியில் அரசின் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்கள் இதுவரை இல்லை. மதுரை மாநகரில் அதிகமாக நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பகுதிக்கு அதிகமாக குடியிருக்க வருகின்றனர். மேலூர் நகராட்சிப் பகுதியில் ஆக்கிரமித்திருந்த வீடில்லாத ஏழையெளிய மக்கள் நிறைய பேர் காலி செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் 7 ஏக்கர் அளவில் இடத்தைகூட, அரசு புறம்போக்கு இடத்தை, குடிசை மாற்று வாரியத்திற்கு பெயர் மாற்றம் செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலூர் தொகுதியில் இதுவரை அரசு குடியிருப்பு இல்லாததைக் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலந்துகொண்ட 14-வது நிதிக் குழுக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றது. அப்பொழுது பேரூராட்சிகள், நகராட்சிகளில் வாழ்ந்து வருகின்ற 8.62 இலட்சம் குடிசைவாழ் குடும்பங்களுக்கும் வீடு கட்டுவதற்கு 7,150 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நிதி கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சிவகங்கை மாவட்டம் 1983 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டது. அப்பொழுது அங்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாடலாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கட்டப்பட்டது. ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட குடியிருப்புகள், அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் ஒரே வளாகத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளெல்லாம் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலான காரணத்தால் பல, group, group ஆக இருக்கக்கூடிய குடியிருப்புகளெல்லாம், இன்றைக்குச் சிதிலமடைந்து அங்கே யாரும் குடியிருக்க முடியாத நிலையில் வெளியிலே தங்கிப் பணியாற்ற வேண்டிய நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் குடியிருப்புகளை மாற்றி அமைப்பதோடு, அந்த வளாகத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வு செய்து, பழுதடைந்திருந்தால், பழுதை நீக்கி, குடியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வீட்டு வசதி வாரியம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

227—

மேம்பாலம்

***6530—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, காமாட்சிப்பட்டி–ஆதாலியூர் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?